## 1-1 தாகமுள்ள ஆத்துமா

"*அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்*" (சங்கீதம் 119:2)

"*கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருள்*"தான் நம் இலக்கு (பிலிப்பியர் 3:14). பரிசுத்த ஆவியானவர் இந்த ஒப்பற்ற இலக்கை நம் இருதயத்தில் ஆழமாகப் பதித்துவிட்டால், மற்றவைகளெல்லாம் பின்னால் போய்விடும், போய்விட வேண்டும். இந்த இலக்கோடு ஒப்பிடும்போது, மற்றவைகள் அற்பமானவை. கிறிஸ்துவே இந்தப் பந்தயப்பொருள். அவர் "*எல்லாரிலும் எல்லாமுமாக*" இருக்கிறார்; "*சகலமும் அவராலும், அவர்மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக, ஆமென்*" (ரோமர் 11:36).

ஒருநாள் ஒரு வாலிபன் ஒரு முனிவரிடம் சென்று, "உம்மால் கடவுளைக் கண்டுபிடிக்க முடியுமா? எப்படி?" என்று கேட்டான். கொஞ்ச நாட்கள் அந்த முனிவர் அவனுக்கு எந்தப் பதிலும் சொல்லவில்லை. ஒருநாள் மாலையில, அவர் அந்த வாலிபனை நோக்கி, "நான் ஆற்றில் குளிக்கப்போகிறேன்; வருகிறாயா?" என்று கேட்டார். இருவரும் ஆற்றில் குளிக்கச் சென்றார்கள். குளித்துக்கொண்டிருக்கும்போது, திடீரென்று முனிவர் அவனைப் பிடித்துத் தண்ணீருக்குள் அமுக்கினார். அவன் அமிழ்ந்துபோகும்வரை அவர் அவனை அமுக்கிப்பிடித்துக்கொண்டிருந்தார்; அதன்பின் அவனை விட்டுவிட்டார். அவன் தலை தண்ணீரைவிட்டு வெளியேவந்தவுடன், அந்த முனிவர் அவனிடம், "நீ தண்ணீருக்குள் அமிழ்ந்திருந்தபோது எதை அதிகமாக விரும்பினாய்?" என்று கேட்டார். "சுவாசிப்பதற்குக் கொஞ்சம் காற்று வேண்டும் என்று தவித்தேன்," என்று பதில் சொன்னான். அதற்கு அந்த முனிவர், "சுவாசிப்பதற்குக் கொஞ்சம் காற்று வேண்டும் என்று நீ தவித்ததுபோல, கடவுள் வேண்டும் என்று நீ தவிக்கும்போது, ஏங்கும்போது, நீ அவரைக் கண்டுபிடிக்கலாம்," என்று சொன்னார். (G. Gardner)

நம்முடைய ஏக்கமும், தாகமும், எதன்மேல் இருக்கிறதோ அதை நோக்கியே நாம் சென்றுகொண்டிருக்கிறோம். ஒரு வகையில், நாமெல்லாரும் நம் தாகங்களின் கூட்டுமொத்தம். தாக இருதயமுள்ளவர்கள் மட்டுமே தேவனைத் தேடுகிறார்கள். "என் ஆத்துமா தேவன்பேரில், ஜீவனுள்ள தேவன் பேரில், தாகமாயிருக்கிறது," என்பது அவர்களுடைய கதறுதல். அந்தத் தாகமும், ஏக்கமுமே, அவர்களை உந்தித்தள்ளியது. அதனால் அவர்கள் தேவன்மேல் கொண்டிருந்த அன்பு அனலாய்த் தகித்தது. அவர்கள் எட்டிய உயரத்தை நாமும் எட்ட முடியும் என்ற விசுவாசம் நம்மிடம் உண்டா?

"*தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறார்*" (சங்கீதம் 107:8).

---

## 1-2 வாழ்க்கையின் குறிக்கோள்

"*ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது*" (கொலோசெயர் 2:9).

அவருடைய கிளைகளாகிய நாம் கனி கொடுப்பதற்குத் தேவையான எல்லாவற்றையும் திராட்சைச் செடியாகிய நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழங்குகிறார். நம் தேவைகளெல்லாம் நம் பிதாவின் ஐசுவரியத்தின்படி மகிமையான கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கின்றன (பிலிப்பியர் 4:19).

"தேவன் நம்மைப் பார்க்கும்போது, கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை ஏற்கெனவே பரிபூரணமுள்ளவர்களாகவே பார்க்கிறார். நம்மைக்குறித்து ஏற்கெனவே அவருக்குள் இருக்கும் இந்த உண்மை, நம் வாழ்க்கையில் நிஜமாக மாறுவதே கிறிஸ்தவ வளர்ச்சியாகும். '*நானே திராட்சைச் செடி; நீங்கள் கொடிகள்*' என்று அவர் கூறுகிறார். ஆனால், திராட்சைச் செடியாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கிளைகளாகிய நமக்கு ஜீவனின் கோட்பாட்டை மட்டும் தரவில்லை; அவர் ஜீவனின் மாதிரியையும் தந்திருக்கிறார். கிளைகளைத் திராட்சைச் செடியைப்போல் உருவாக்க வெளியேயிருந்து எந்த அழுத்தமும் தேவையில்லை அல்லது கிளைகளை எந்த அச்சிலும் ஊற்றி வார்க்கத் தேவையில்லை. கிளைகளின் உருவம், நிறம், சுவை, மணம் போன்ற சிறிய பெரிய எல்லாப் பண்புகளும் அந்தச் செடியின் வேரினால் நிர்ணயிக்கப்படுகின்றன; அந்த வேரிலிருக்கும் ஜீவனின் குணம் கிளைகளில் படிப்படியாக உருவாகின்றது. ஆகையால் உண்மையான விசுவாசி, இயேசுவின் ஜீவன் தன் சரீரத்தில் வெளியரங்கமாக வேண்டும் என்பதைவிட சிறப்பான ஒன்றை ஆண்டவரிடத்தில் கேட்கமாட்டான் (2 கொரிந்தியர் 4:11). ஏனென்றால், அவனுடைய இன்பம் துன்பம், வெற்றி

தோல்வி, மகிழ்ச்சி துக்கம், வாழ்வு தாழ்வு, சுகம் சுகவீனம், பலம் பலவீனம் போன்ற அவனுடைய வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் திராட்சைச் செடியாகிய ஆண்டவருடைய ஜீவன் வெளியரங்க மாகும்" Adnoriram Judson Gordon

"தேவனுடைய வேலையை நம் கடும் உழைப்பால், முயற்சியால், ஆற்றலால், சொந்த பலத்தால் நிறைவேற்ற முடியாது. கிறிஸ்து நம் உயிரிலும், வாழ்விலும் முழுமையாக நிரம்பும் அளவுக்கு நாம் அவரைச் சொந்தமாக்க வேண்டும், ஆதாயமாக்க வேண்டும். அப்போது, அது கடுமையான உழைப் பாக இருக்காது; மாறாக, அவருடைய ஜீவனின் பொங்கிவழிதலாக இருக்கும்."

"*மேலும், சகல துரைத்தனங்களுக்கும், அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்*" (கொலோசெயர் 2:10).

---

## 1-3 தேவனுடைய குறிக்கோள்

"*தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண் ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது*" (2 நாளாகமம் 16:9).

தேவன் தம்மைக் குமாரனில் வைத்தார்; நம்மைப்பற்றிய தேவனுடைய எண்ணங்களெல்லாம் அவ ருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் மையங்கொண்டுள்ளன. ஆகவே, அவைகள் "*தீமைக் கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகள்*" (எரேமியா 29:11). பிறர் நமக்குத் தீமை செய்யக்கூடும். ஆனாலும், நம் பிதாவானவர் தம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் அதை நமக்கு நன்மையாக மாற்றுவார்.

"என் வாழ்க்கைச் சூழ்நிலைகள்மூலமாகவும், பாடுகள்மூலமாகவும் அவருடைய குமாரனுடைய குணம் (மூலக்கூறுகள்) என்னில் வளர வேண்டும் என்பதே தேவனுடைய குறிக்கோள். ஒரு பக்கம், பழைய சிருஷ்டிப்பின் மூலக்கூறுகளை நான் என்னில் பார்க்கும்போது அவை மிகப் பயங்கரமாகவும், கோர மாகவும் தோன்றக்கூடும். ஆனால், இன்னொரு பக்கம், என் பழைய சுயம் இல்லாத வேறு ஏதொ வொன்றை தேவன் என்னில் சேர்த்துக்கொண்டிருக்கிறார்; அவர் இன்னொருவரை, என்னிலிருந்து முற்றிலும் மாறுபட்ட இன்னொருவரை, எனக்குள் கொண்டுவந்தும், உருவாக்கிக்கொண்டும் இருக் கிறார். அவர் என் புதிய ஜீவனாகிய அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து. இந்தச் செயல் மிக மெதுவாக நடப்பதுபோல் தோன்றலாம். இருப்பினும், எனக்குள் ஏதோவொரு வளர்சிதைமாற்றம் நடந்துகொண்டிருக்கிறது; இயேசு கிறிஸ்து எனக்குள் வளர்ந்துகொண்டேயிருக்கிறார். குமாரத்துவம் இன்னும் என்னில் அவ்வளவு வெளிப்படையாகத் தோன்றவில்லை. ஆனால், குமாரத்துவம் என்னில் வெளியரங்கமாகும். தேவன் இப்போது என்னில் என்ன செய்துகொண்டிருக்கிறாரோ அது இறுதியாக அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒத்த சாயலாகி வெளிச்சத்துக்கு வரும்" T.Austin Sparks

"பரலோகத்தை, பரம சுபாவத்தை, நம் இருயத்தில் பதிப்பதற்கேதுவாக அதை மிருதுவாக்குவதற் கான இன்னல்கள் பரிசுத்த ஆவியானவரின் கரங்களில் இருக்கின்றன. '*தேவன் என் இருதயத்தை இளக்கரிக்கப்பண்ணினார்*' என்று யோபு கூறினார் (யோபு 23:16). மெழுகு கட்டியாக இருக்கும்போது அதில் முத்திரையைப் பதிக்க முடியாது. அதில் முத்திரையைப் பதிக்க வேண்டுமானால், அதை உருக்க வேண்டும். அதுபோல, தெய்வீக சாயலைப் பெற்றுக்கொள்வதற்காக விசுவாசி சூழ்நிலைகள் மூலமாகவும், பாடுகளின்மூலமாகவும், ஆயத்தமாக்கப்படுகிறான்."

"*நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகு வீர்களாக*" (கொலோசெயர் 2:7).

---

## 1-4 வனாந்தர வளங்கள்

"*அவர் அவர்களை நோக்கி, வனாந்தரமான ஓரிடத்தில் தனித்தே சற்று இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார்*" (மாற்கு 6:31).

நம்முடைய தனிமையான பயணத்தின் ஆரம்ப நாட்களில், வனாந்தரம் சுட்டெரிக்கும் வெயிலும், வறண்ட மணலும் நிறைந்த பாலைவனமாக மட்டுமே தோன்றும். வனாந்தரத்தில் நாம் தொடர்ந்து பயணம் செய்யும்போது, அங்கு சுனைகள் சுரக்கின்றன; மலர்கள் மலர்கின்றன.

"பிதாவானவர் உங்களை வனாந்தரத்திற்குக் கூட்டிக்கொண்டு போயிருக்கிறாரா? நீங்கள் எவைகளையெல்லாம் சார்ந்திருந்தீர்களோ, அவைகளையெல்லாம் அவர் உங்களிடமிருந்து பிடுங்கியிருக்கிறாரா? அப்படியானால், மகிமையான அனுபவம் உங்களுடையதாக மாறுகிறது என்று பொருள். இது தேவன் உங்களை மகிமைப்படுத்தக்கூடிய வழியாக இருக்கலாமே! நீங்கள் இழந்தவைகளைக்குறித்து முறையிடாதீர்கள், புகார் செய்யாதீர்கள்; அவைகளை மீண்டும் பெற வேண்டும் என்று ஏங்காதீர்கள். உங்கள் வனாந்தரப் பயணத்தில் நீங்கள் இவ்வாறு முறையிட்டால், புகார் செய்தால், ஏங்கினால், நீங்கள் எகிப்துக்குத் திரும்பிப்போக வேண்டும் என்று விரும்பின இஸ்ரவேல் மக்களைப்போல் இருக்கிறீர்கள் என்று பொருள். தேவன் தம் மக்களைத் தொடர்ந்து நடத்திக்கொண்டேயிருக்கிறார். இறைச்சிக்குப்பதிலாக, அவர் அவர்களுக்குப் பரத்திலிருந்து மன்னாவைக் கொடுக்கிறார்; நைல் நதியின் தண்ணீருக்குப்பதிலாக கற்பாறையிலிருந்து தண்ணீர் கொடுக்கிறார். ஆகவே, உங்கள் வனாந்தரப் பயணத்திலும், இருளான நாட்களிலும், கஷ்டமான காலத்திலும்கூட நீங்கள் அவர்மேல் நம்பிக்கையாயிருக்க வேண்டும். ஆயினும், தேவன் தம் பிள்ளைகளை வனாந்தரத்திற்கு அழைத்துச் செல்லும்போது, அங்கு யார்யாரெல்லாம் தங்கள்மேல் வைத்திருக்கும் சுய-நம்பிக்கையை இழந்துபோகிறார்களோ அவர்களுக்கு மட்டுமே இது சாத்தியமாகும்."

"நம் இருதயங்களை மிகக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய துக்கங்கள் இருக்கின்றனவா? அவை ஒவ்வொன்றும் நம்மை கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்துகிற சாலையாக மாற வேண்டும் என்று தேவன் தீர்மானித்துள்ளார். இதை நம்புங்கள். அப்போது, நாம் அவரிடத்தில் போய்ச் சேர்வோம்; நாம் இதுவரை அறியாத விதத்தில் அவருடைய அன்பையும், வல்லமையையும் அறிவோம்." Charles Andrew Coates

"*அவர் அவர்களை வனாந்தரங்களில் நடத்தும்போது, அவர்களுக்குத் தாகவிடாயிருந்ததில்லை; கன்மலையிலிருந்து தண்ணீரை அவர்களுக்குச் சுரக்கப்பண்ணினார்*"..."*அவர்களோடேகூடச் சென்ற ஞானக் கன்மலையிலின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே*" (ஏசாயா 48:21; 1 கொரிந்தியர் 10:4).

---

## 1-5 அன்பு கவர்ந்திழுத்து, ஒத்தசாயலாக்குகிறது

"*ஆம், அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தேன்; ஆதலால், காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்*" (எரேமியா 31:3).

தேவனே முதல் காரணம், ஒரே காரணம். எப்போதும் அவரே முதலாவது செயல்பட ஆரம்பிக்கிறார். "*தேவன்...அவரைத் தந்தருளி இவ்வளவாய்...அன்புகூர்ந்தார்*"; "*நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை; நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்*" (யோவான் 3:16; 15:16). தேவன் நம்மேல் பாராட்டுகிற அன்புக்கு மாறுத்தரம் கொடுப்பதற்குத் தேவையான இதயத்தாகம்கூட அவரிடமிருந்தே வருகிறது. "*கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தம் நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்தின தேவன்*" (1 பேதுரு 5:10). அவரே நம்மைத் தம் குமாரனிடம் கூட்டிக்கொண்டுவந்திருக்கிறார்; எனவே, அவரே நம்மைத் தம் குமாரனுடைய சாயலுக்கு ஒத்தசாயலாக்குவார்.

"தேவன் உன்னைத் தம் பக்கமாக இழுத்துக்கொண்டிருக்கிறார் என்று நீ உனக்குள்ளே உணர்ந்தால், அந்த உணர்வை ஒரு பெரிய பொக்கிஷத்தைச் சீராட்டுவதுபோல் சீராட்டுவாயாக. தீராத்தாகம் உனக்குள் இருப்பதாக நீ உணர்ந்தால், நீ தேவனோடு நெருக்கமாக நடக்க ஆரம்பித்திருந்தால், அதை நீ ஏதோதானோவென்று எடுத்துக்கொள்ளாதே; அல்லது அதை மேலோட்டமாகவோ, இலேசாகவோ கருதாதே. உனக்குள் இப்படிப்பட்ட தெய்வீக இழுப்போ, தேவன்பேரில் தணியாத் தாகமோ இருப்பதாக நீ உணரவில்லையென்றால் அவரை நோக்கிக் கதறுவாயாக. அப்போது அவர் அதை உனக்குத் தருவார். இப்படிப்பட்ட தாகம் வேண்டும் என்ற ஆசையும், வேட்கையுமே தாகத்தின் ஆரம்பம் என்பதையும், இந்த ஆவிக்குரிய தாகம் இல்லாதவரை நீ ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை எல்லாமாக எடுத்துக்கொள்ள முடியாது" H.Mclravi

"நம் ஆண்டவர் நமக்குத் தேவையான நிரப்பீட்டைத் தாராளமாக வழங்குகிறார். ஆனாலும் அவர் அதை ஏனோதானோவென்று வழங்குவதில்லை; அல்லது வீணாக்குவதுமில்லை. உண்மையான தாகமும், தேவையும் இருப்பவர்களுக்கு அவர் அதை வழங்குகிறார். தேவனுடைய நிரப்பீடு தனக்கு

வேண்டும் என்று ஒருவன் தவிப்புடன் தேடிக்கொண்டிருப்பதை தேவன் பார்க்காதவரை அவர் அசையமாட்டார் என்பது நிலையான கோட்பாடாகும்” T.Austin-Sparks.

“*என்னை அனுப்பின பிதா ஒருவனைக் கவர்ந்திழுத்து, என்னிடம் வர வேண்டும் என்ற ஆசையை அவனுக்குக் கொடுக்காவிட்டால் ஒருவனும் என்னிடத்தில் வரமாட்டான்*” (யோவான் 6:44).

---

## 1-6 சுயத்தின் நிறைவு

“*நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம் மாத்திரம்?*” (ஏசாயா 2:22).

கிறிஸ்தவர்களாகிய நம்மை ஒன்று சுய-ஜீவன் ஆளுகைசெய்கிறது அல்லது கிறிஸ்து இயேசுவி லுள்ள ஜீவ ஆவியானவர் ஆளுகைசெய்கிறார். நாம் இந்த இரண்டில் ஒன்றினால்தான் ஆளப்படு கிறோம், கட்டுப்படுத்தப்படுகிறோம். சுய-ஜீவனால் (ஆத்தும ஜீவனால்) வாழும் வாழ்க்கை நரக வாழ்க்கை; ஜீவ-ஆவியானவரால் வாழும் வாழ்க்கை பரலோக வாழ்க்கை.

“தனக்குள் இருக்கும் சுய-ஜீவனின் பயங்கரமான வல்லமையையும், தேவனுக்கு எதிரான அதன் பகைமையையும், அதன் மாம்சப்பிரகாரமான இயல்பையும், அது பரிசுத்த ஆவியானவரைத் துக்கப் படுத்துவதையும், தணிப்பதையும், ஆவியானவரின் ஆசீர்வாதமான எல்லாக் கனிகளையும் பாழாக்கி அழிப்பதையும், ஆவியானவரின் நிறைவான ஜீவனுக்குள் நுழைய வேண்டும் என்ற தாகத்தைக் கடுமையாகவும், மூர்க்கமாகவும் எதிர்ப்பதையும் அறிந்தவனுக்கு ஒரு காரியம் நன்றாகத் தெரியும்; இதற்கெல்லாம் காரணம் தனக்குள் சுயம் நிறைவாக இருக்கிறது என்பதல்ல, மாறாக ஆவியான வரின் நிறைவு இல்லை என்பதே என்று அவனுக்குத் தெரியும். இதற்கு வேறு எந்த விளக்கமும் தேவையில்லை” J H McC (J H மாக்கோங்கி).

“உன் ஆத்துமா அழகாக இல்லை என்பதைப் பிரதிபலிக்கிற கண்ணாடியை உடைத்துப்போட வேண் டும் என்று விரும்பாதே. அதற்குப் பதிலாக உள்ளதை உள்ளதுபோல் காண்பிக்கிற காண்ணாடி யாகிய சத்தியத்தை நீ வரவேற்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவே முதன்மையானது; அதற்குப்பின் உன்னை, உன் சுயத்தை, அறிகிற அறிவு மிக முக்கியமானது” Norman Grubb

“உறுதியாகப் பற்றிப்பிடித்துக்கொள்வதற்குத் தகுதியான எதுவும் சுயத்தில் இல்லவே இல்லை. அது சிலுவைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். இப்பேர்ப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு நாம் நம்மைச் சமர்ப்பித் திருக்கிறோம். எனவே, நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எல்லாவற்றிலும் முதன்மையும், மேன்மையுமான இடத்தைப் பெற வேண்டும் என்ற மகிமையான நோக்கத்திற்காக, பரிசுத்த ஆவி யானவர் நம்முடைய பழைய சுபாவத்தை எப்போதும் மரணத்தில் வைத்துப் பிடித்துக்கொள்வதற்கு, பிதாவானவர் அவருக்கு எல்லாவிதமான வாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொடுப்பார்” F.M

“*என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண் கிறது. ஆகையால், நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் அமர்ந்து மனஸ்தாபப்படு கிறேன் என்றான்*” (யோபு 42:5, 6).

---

## 1-7 வாழ்வின் உள்நோக்கம்

“*மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரர்களாயிருக்கிறார்கள்*” (ரோமர் 8:14).

அநேக ஆண்டுகளாகப் பாவம் செய்து, தோற்றுப்போனபிறகுதான் நம்முடைய சொந்த உள்நோக்கங் களை நம்மால் பார்க்கமுடிகிறது. கடைசியாக, வளர்ந்துகொண்டிருக்கிற விசுவாசி ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்கிறான். அது என்னவென்றால், “*கிறிஸ்து இயேசுவிலுள்ள ஜீவனுடைய ஆவியானவரே*” உள்நோக்கத்தின் மூலகாரணமேதவிர வேறொன்றும் இல்லை என்பதை அறிந்து நம்ப ஆரம்பிக் கிறான்.

“நம் உள்நோக்கங்களெல்லாம் அக்கினியால் பரீட்சிக்கப்படும். நாம் செல்வாக்கையும், பேர் புகழை யும், நன்மதிப்பையும், நற்பெயரையும், அந்தஸ்தையும், கௌரவத்தையும், வெற்றியையும் தேடு

கிறோமா? நம் உள்நோக்கங்களெல்லாம் கலப்படமேயில்லாமல் முற்றிலும் தூய்மையாக இருக்கின்றன என்று ஒருவேளை நாம் நினைக்கலாம். ஆனால், ஒவ்வொரு நாளும் நாம் மரணத்திற்குள் செல்லாதவரை, அதாவது மேலே சொல்லப்பட்டுள்ள எல்லாவற்றிற்கும் மரிக்காதவரை, நாம் 'அசட்டை பண்ணப்பட்டு, மனுஷரால் புறக்கணிக்கப்படாதவரை,' நாம் பொல்லாதவர்கள் என்று ஒதுக்கித்தள்ளப்படாதவரை, நம்முடைய வேலைபோல் தோன்றுவது உண்மையாகவே நிறுத்தப்படாதவரை, தேவனுக்காக நாம் செய்யும் சேவையின் உண்மையான குறிக்கோளையும், உள்நோக்கத்தையும் நம்மால் பார்க்கவே முடியாது. நமக்குள்ளும், நமக்கு வெளியேயும் இருக்கிற ஆதாமுக்குரிய எல்லாவற்றிலுமிருந்து நம்மை வேறுபிரிக்கிற சிலுவையே நம் உள்நோக்கங்களை அம்பலப்படுத்துகிற நல்ல பரீட்சையாகும்.

"உண்மையாகவே தேவனால் பயன்படுத்தப்பட்ட தேவ மனிதர்கள் இந்தப் பாதையில் நடந்துபோயிருக்கிறார்கள். தேவன் தம் ஆவியை நம் மாம்சத்தின்மேல் ஊற்றமாட்டார்; இந்த மாம்சம் கீழ்த்தரமான, கேடுகெட்ட மாம்சமாக இருந்தாலும் சரி அல்லது செப்பனிடப்பட்ட, நாகரீகமான, ஆத்துமாவுக்குரிய, கல்வியறிவுள்ள, கற்றறிந்த மாம்சமாக இருந்தாலும் சரி. நம்மூலம் மற்றவர்களுக்கு ஜீவன் போக வேண்டுமானால், அதற்குமுன், நமக்கு மரணம் சம்பவிக்க வேண்டும் (2 கொரிந்தியர் 4:12). தேவனுடைய அக்கினி இறங்க வேண்டுமானால், அதற்குமுன் அங்கு ஒரு பலிபீடமும், பலிபீடத்தில் பலியும் இருக்க வேண்டும். அது மட்டும் அல்ல; அது சர்வாங்கதகனபலியாக இருக்க வேண்டும்" T.Austin-Sparks

*"…உங்கள் சரீரங்களை…ஜீவ பலியாக ஒப்புக்கொடுங்கள்…இதுவே…புத்தியுள்ள ஆராதனை"* (ரோமர் 12:1)

---

## 1-8 அசுத்தன்! அசுத்தன்!

*"ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்... சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே"* (ஏசாயா 6:5).

*"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது"* (1 தெசலோனிக்கேயர் 5:18) என்று பவுல் எழுதுகிறார். எல்லாவற்றிற்காகவும் என்பதில் நம் சுயம் அம்பலமாக்கப்படுவதும் அடங்கியிருக்கிறது. சுயம் அம்பலமாக்கப்படுவதற்காகவும் நாம் கர்த்தரை ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். முதலாவது, நாம் நமக்குள் இருக்கும் பாவத்தன்மையை மறைக்க விரும்புகிறோம்; எந்த நிலைமையிலும் நாம் நம்மைப் பாதுகாத்துக்கொள்ளவே விரும்புகிறோம். அதன்பின், என்ன விலைகொடுத்தாவது, தேவனுடைய கிருபையால், நாம் சுயத்திலிருந்து விடுதலைபெற ஏங்குகிறோம். சிலுவையே நாம் கொடுக்க வேண்டிய விலைக்கிரயமாகும்.

தேவ மக்கள் தங்கள் சுயத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காக பரிசுத்த ஆவியானவர் அவர்களை நடத்துவார் (ரோமர் 7); இது அவசியமான ஒரு கடல்பயணத்தைப்போன்றது; தேவ மக்கள் எல்லாரும் இந்தப் பயணத்தை மேற்கொண்டாக வேண்டும். ஆனால், இந்தப் பயணத்தில் சுயத்தைக் காண நேரிடும் என்று முன்கூட்டியே எந்த எச்சரிக்கையும் பெறாத வாலிபர்கள், பயணத்தின்போது தங்கள் பாவத்தன்மையைப் பார்த்தவுடன் திகைத்துவிடுகிறார்கள், தவித்துவிடுகிறார்கள், தடுமாறிவிடுகிறார்கள். இதுதான் அவர்களுடைய சுபாவம் என்பது அவர்களுக்குத் தெரியாதே! தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன என்பதையும், தேவன் தங்களை ஏற்றுக்கொண்டார் என்பதையும் அறிந்தபோது அவர்கள் முதலாவது அதிகமாகக் களிகூர்ந்தார்கள். ஆனால், மிக விரைவில் அவர்கள் ஒரு காரியத்தை உணர ஆரம்பிக்கிறார்கள். அது என்னவென்றால், தங்களிடத்தில் எல்லாம் சரியாக இல்லை என்றும், தோற்றுவிட்டதாகவும், மனம்மாறிய வேகத்தில் அடைய வேண்டும் என்று தாங்கள் நிர்ணயித்திருந்த உயர்ந்த தரத்திலிருந்து விழுந்துவிட்டதாகவும் அவர்கள் உணர்கிறார்கள். முந்தியோ பிந்தியோ இது நடக்கும்."

"அவனுடைய நிலைமை எவ்வளவு ஆரோக்கியமானது என்றும், (சுயம் இருப்பது) தவிடுபொடியாக்கும் இந்தக் கண்டுபிடிப்பு, அவன் இன்னும் சிறப்பான காரியங்களைத் தொடர்ச்சியாகக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்கான ஒரு முன்னுரையே என்று அவனுக்குத் தெரியாது. அவனுடைய நித்திய வளத்துக்காகத் தேவனே இவைகளையெல்லாம் திட்டமிட்டு வடிவமைத்திருக்கிறார். கிருபையின் மண்டலங்களுக்குள் நம்மை இன்னும் நிறைவாக நடத்திச்செல்ல, முற்றிலும் மோசமான நம்

பாவத்தன்மையையும், நம் தேவையையும் வாழ்நாள் முழுவதும் தேவன் நமக்குக் காண்பிக்க வேண்டும்" J.C.Metcalf

"*கர்த்தரோ உண்மையுள்ளவர்; அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக் கொள்வார்*" (2 தெசலோனிக்கேயர் 3:3).

---

## 1-9 வல்லமையற்றவர்கள்

"*இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே*" (ரோமர் 8:37).

'நீ வல்லமையுள்ளவனாக இருக்க வேண்டும்' என்று உலகமும், மாம்சமும், பிசாசும் சொல்லுகின்றன. ஆனால், 'நீ வல்லமையற்றவனாக இருக்க வேண்டும்'; ஏனென்றால், அப்போதுதான் "*(உன்) பல வீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்*" என்று பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியானவரும் கூறுகிறார்கள் (2 கொரிந்தியர் 12:9).

"ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி வாழ விரும்புகிறவர்கள் உண்டு; இந்த முயற்சியில் அவருடைய உண்மையான ஆசை மறைந்துவிடவில்லையென்றால், நாம் 'அவருடைய பரிபூரண ஜீவனை' அனுபவிப்பது தடைபடவில்லையென்றால், இதனால் பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படாது. கிறிஸ்து நம் இருதயத்துக்குள் வந்து, அங்கு வாசம்பண்ணுகிறார். "என்னைப்பொறுத்தவரை, வாழ்வதென்றால் கிறிஸ்துவே" என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதுபோல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவருடைய வாழ்க்கையை நம்மில் வாழ விரும்புகிறார். பவுல் எப்படிப்பட்ட நபராக இருந்தாரோ, அவர் என்ன செய்தாரோ அவையெல்லாவற்றிற்கும் கிறிஸ்துவே உண்மையான மூலாதாரமாகவும், மூலகாரணமாகவும், மூலவிசையாகவும், உயிர்நாடியாகவும் இருந்தார். இது என்னே அற்புதமான காரியம்! நாம் பின்பற்றுவதற்கு அல்லது ஒத்திருப்பதற்கு கிறிஸ்து நமக்கு வெறுமனே ஒரு மாதிரியை மட்டும் விட்டுச்சென்றிருந்தால், நாம் மனமுறிவடைந்திருப்போம், நம்பிக்கை இழந்திருப்போம். ஏனென்றால், ஒரு மாதிரியைப் பின்பற்றுவதற்கு அல்லது அதற்கு ஒத்திருப்பதற்குத் தேவையான வல்லமை நமக்குள் இல்லை. நமக்கு ஒரு புதிய மூலாதாரம், மூலகாரணம், மூலவிசை-ஒரு புதிய ஊற்று-தேவைப்படுகிறது. கிறிஸ்துதாமே நமக்கு அப்படிப்பட்ட ஊற்றாக இருக்க விரும்புகிறார்" E.C.Hadley

"ரோமர் ஏழாம் அதிகாரத்தில் நாம் பார்க்கிற மனிதன் முழுக்க முழுக்க அவனைப்பற்றிய காரியத்திலேயே ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறான். தான் நேசிக்கிற நன்மை எதுவும் தன்னிடம் இல்லை என்பதைக் கண்டவுடன் அவனுக்கு ஏமாற்றமும், வருத்தமும், வேதனையும் வருகின்றன. ஆனால், தன்னிடம் எந்த நன்மையும் இல்லை என்றும், அது கிறிஸ்துவில் மட்டுமே இருக்கிறது என்றும் ரோமர் எட்டாம் அதிகாரத்தில் நாம் பார்க்கிற மனிதன் கற்றுக்கொள்ளுகிறான். "கிறிஸ்துவுக்குள் தான் முழுமையானவன்" என்பதைக் கண்ட மகிழ்ச்சியில் அவன் வெற்றிப்பாடல் பாடுகிறான்" Harry Allen Ironside.

"*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு; உள்ளான பெலத்தை என்னுள் செலுத்துகிற அவர்மூலம் நான் எதையும், எதற்குச் சமமான எதையும், செய்யத் தயாராக இருக்கிறேன்*" (பிலிப்பியர் 4:13).

---

## 1-10 கிறிஸ்துவில் இளைப்பாறுதல்

"*ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்*" (எபேசியர் 2:13).

நம்மைக்குறித்த தேவனுடைய நோக்கத்தை தேவன் விரும்பிய நேரத்திலும், வழியிலும் நிறைவேற்றுவதற்காக நாம் "தேவனை தேவனாக இருக்க" இடம் அளிக்க ஆரம்பிக்கும்போதுதான், நம்முடைய எல்லா முன்னெச்சரிக்கைகளையும் (பயத்தையும்) தூக்கியெறிந்துவிட்டு, அவரை நோக்கிப்பார்க்கும் அந்த நாளில்தான், நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்படுகிறது.

“நம் பிதாவானவர் எந்தக் காரியத்தையும் திடுதிப்பென்று செய்வதில்லை. அவர் அதை நீண்ட காலத்துக்குமுன் ஏற்கெனவே ஆயத்தம்பண்ணிவிட்டார். தேவனுடைய அழைப்பைப் பொறுத்தவரை, நாம் முறுமுறுப்பதற்கோ அல்லது பெருமைப்படுவதற்கோ ஒன்றுமே இல்லை; இந்தக் காரியத்தில் நாம் யாரைக்குறித்தும் பொறாமைப்பட வேண்டிய தேவையில்லை. ஏனென்றால், மற்றவர்களுடைய சாதகமான காரியங்களுக்கும், நிலைமைகளுக்கும் நமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஏனென்றால், “*விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல; இரங்குகிற தேவனாலேயாம்*” (ரோமர் 9:16). நம் பரம்பரை, நம் பிறப்பு, நம் இயற்கையான சாதகபாதகங்களையெல்லாம் தேவன் ஏற்கெனவே தீர்மானித்துவிட்டார். நம் வாழ்க்கைப் பாதையில் நாம் வேறு சில காரியங்களைக் கற்றுக்கொள்ளக் கூடும்; ஏனென்றால், நாம் எப்போதும் கற்றுக்கொண்டேயிருக்கிறோம். ஆனால், தேவனுடைய வழியே ஒரே வழி, மெய்யான வழி. நாம் கடந்துவந்த பாதையைத் திரும்பிப்பார்க்கும்போது, நம் வாழ்க்கையில் எல்லாவற்றையும் தேவனே ஆயத்தம்பண்ணியிருந்தார் என்ற உண்மையை அறிந்து நாம் அவரைப் பணிந்து ஆராதிக்கிறோம். இப்படிப்பட்ட மனப்பாங்கு இருந்தால், அதுவே உண்மையான இளைப்பாறுதல்” Watchman Nee.

“அதிகமான ஆசீர்வாதத்தைத் தேடி அலைந்து, நம் உண்மையான இளைப்பாறுதலை இழந்துவிடாதபடிக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாம் பதற்றத்தோடு இருக்கும்போது (ஆவிக்குரிய முன்னேற்றம் வேண்டும் என்ற பதற்றமாக இருந்தாலுங்கூட) தேவனால் வேலைசெய்ய முடியாது. எல்லாவற்றையும் அவர் ஏற்கெனவே ஆயத்தம்பண்ணியிருப்பதாக அவர் சொல்லும்போது, அவர் அதை நிறைவேற்றுவார் என்று நம்பி, அவருக்கே விட்டுவிட வேண்டும்.”

“*ஏனெனில், தேவனே தம்முடைய கிருபையான சித்தத்தைச் செய்வதற்கான ஆசையை உங்களுக்குள் உண்டாக்கி, அந்த ஆசையை நிறைவேற்றவும் செய்கிறார்*” (பிலிப்பியர் 2:13).

## 1-11 கிறிஸ்துவே வடிவமைப்பாளர்

“*நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்*” (எபேசியர் 1:3).

தேவன் இறையாண்மையுள்ளவர்; இந்தத் தேவன் அவருடைய பரிபூரணமான சித்தத்தை நிறைவேற்றுவதற்காக பிரபஞ்சத்திலுள்ள எல்லா அணுக்களையும் மிகத் துல்லியமாகத் திட்டமிட்டு வகுத்துக் கட்டுப்படுத்துகிறார்; எனவே, தேவன் நம்மை அவருடைய கருவிகளாக வனைவதில் குறியாகவும், முனைப்பாகவும் இருப்பதற்கான காரணத்தைப் புரிந்துகொள்வது கடினம் அல்ல. “*தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்*” (எபேசியர் 1:12).

“நீங்கள் தேவனுடைய ஒரு வைரம்; கரடுமுரடான வைரம். நீங்கள் அவருக்காக ஒளிவீச வேண்டும் என்பதற்காக அவர் வைரமாகிய உங்களை வெட்டப்போகிறார்; ஒரு வைரத்தை இன்னொரு வைரததால்தான் வெட்ட முடியும். மற்ற வைரங்களால், மற்ற கிறிஸ்தவர்களால், மற்ற ஆவிக்குரிய கிறிஸ்தவர்களால் நீங்கள் நொறுக்கப்பட வேண்டும், பொடியாக்கப்பட வேண்டும், வெட்டப்பட வேண்டும், காயப்பட வேண்டும். நீங்கள் எந்த அளவுக்கு வெட்டப்படுகிறீர்களோ, நொறுக்கப்படுகிறீர்களோ, செப்பனிடப்படுகிறீர்களோ, பூரணமாக்கப்படுகிறீர்களோ, அந்த அளவுக்கு நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காகப் பிரகாசிப்பீர்கள்” G.Marshal.

“தேவன் தம் அநந்த ஞானத்தின்படி நமக்குப் பரீட்சைகளையும், சோதனைகளையும் நியமித்திருக்கிறார். நாம் அவைகளை வரவேற்கவில்லையென்றால் அதற்கு நம் அறிவீனமே காரணம். நமக்கென்று பிரத்தியேமாக வடிவமைக்கப்பட்ட பரீட்சைகளையும், சோதனைகளையுமே தேவன் நமக்கு அனுப்புகிறார். நமக்கு எது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம் பரம பிதாவுக்குத் தெரியும். பாடுகளின்மூலமாகவும், வசதிவாய்ப்புகளின்மூலமாகவும் தேவன் நமக்குப் பணிவிடை செய்கிறார். நம்முடைய பாடுகளும், பரீட்சைகளும் கொஞ்சமே, ஆனால் நம்முடைய பொல்லாத வழிகளோ அநேகம் என்பதை மறந்துவிடக்கூடாது. நம்முடைய அருகதை, தகுதி, ஒன்றுமேயில்லை; ஆனால்,

நம்முடைய வசதிகளோ அதிகம். தேவன் நம்மைப் பரீட்சிக்கும்போது, நாம் அவரை எவ்வளவாய் பரீட்சித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும். அப்போது, அவருடைய கிருபையினால், முறுமுறுப்பதற்குப்பதிலாக அவருடைய பலத்த கரத்தின்கீழ் நாம் அடங்கியிருப் போம்; அதன்பின் ஏற்ற காலத்தில் அவர் நம்மை உயர்த்துவார்."

"*பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்...*" (1 பேதுரு 4:12).

---

### 1-12 ஆவியானவரைச் சார்ந்து வாழ்தல்

"*ஆவியானவரின்படி (ஆவியானவரைச் சார்ந்து) நடந்துகொள்ளுங்கள்; அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்*" (கலாத்தியர் 5:16).

நாம் நீதிமானாக்கப்படுவது முற்றிலும் தேவனைச் சார்ந்தது என்பதைக் கசடறக் கற்றுக்கொண்ட வர்கள், பரிசுத்தமாக்கப்படுவதும் முழுக்கமுழுக்க அவரையே சார்ந்தது என்பதைப் புரிந்துகொள் வார்கள். இரண்டுக்கும் விசுவாசம் என்ற கோட்பாடு பொருந்தும். நீதிமானாக்கப்படுவது பிறப்புக்குச் சமானம் என்றால், பரிசுத்தமாக்கப்படுவது வளர்ச்சிக்குச் சமானம். இந்த இரண்டுக்கும் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்து செய்துமுடித்த வேலையையே நாம் சார்ந்துகொள்ள வேண்டும்; நாம் அதில் இளைப்பாற வேண்டும்.

"நாம் ஆவியானவரின்படி நடப்பதற்காக மாம்சத்தின் இச்சைகளை ஜெயங்கொள்ள வேண்டிய தில்லை; மாறாக, மாம்சத்தின் இச்சைகளை ஜெயங்கொள்வதற்காக நாம் ஆவியானவரின்படி நடக்க வேண்டும். ஆனால், மாம்சத்தின் இச்சைகளை ஓரளவுக்காகவது ஜெயித்தபின்தான் ஆவியானவரைச் சார்ந்து கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முடியும் என்ற தவறான கருத்தில் எதிரியாகிய பிசாசு புதிய விசுவாசிகளை நீண்ட காலம் பிடித்துவைத்துக்கொள்கிறான். மாம்சத்தின் இச்சைகளோடு ஓரளவுக் காவது இடைப்படாதவரை, தங்களால் ஆவியானவரின்படி நடக்க முடியாது என்று அவர்கள் தவ றாக நினைக்கிறார்கள்."

"மாம்சத்தின் இச்சைகளைப் பொறுத்தவரை கொஞ்சம் திருப்திகரமான நிலைமையை எட்டிவிட்டோம் என்று நம்பக்கூடிய நேரம்வரை அவர்கள் காத்திருக்கிறார்கள். அதன்பின்தான் ஆவியானவரின்படி நடக்க முடியும் என்று ஒரு நம்பிக்கை அவர்களுக்கு வருகிறது. ஆனால், இது முற்றிலும் தவ றானது. ஆவியானவரின்படி நடப்பதற்குமுன், நம் மாம்சத்தின் இச்சைகளை ஓரளவுக்காவது நாம் அடக்கிக்கட்டுக்குள் கொண்டுவரும்வரை காத்திருக்க வேண்டும் என்றால், கடந்த காலத்தில் செய் ததைவிட எதிர்காலத்தில் நாம் இன்னும் கொஞ்சம் சிறப்பாகச் செய்வோம் என்ற உறுதியைத் தேவ னுக்கும் நமக்கும் கொடுக்க முடியும் என்று நாம் உணரும்வரை காத்திருக்க வேண்டும் என்றால், நாம் ஆவியானவரின்படி ஒருபோதும் நடக்க மாட்டோம். ஏனென்றால், நாம் ஆவியானவரைச் சார்ந்து வாழாதவரை, நம்மால் மாம்சத்தின் இச்சைகளை ஜெயங்கொள்ள முடியாது; நாம் ஜெயங் கொள்ள மாட்டோம்" David Trien

"*ஆவியானவரின் உள்ளுறைதலால் நிரம்புங்கள் (கட்டுப்படுத்தப்படுங்கள்)*" (எபேசியர் 5:18).

---

### 1-13 பாவத்தின் ஊற்று

"*ஆண்டவரே, நான் பாவியான மனுஷன்*" (லூக்கா 5:8)

ஒரு விசுவாசி தான் பாவி என்றும், தன் சுயம் முழுக்க முழுக்க பாவமானது என்றும் அறிந்தவுடன், அவன் பாவத்தின் அறிகுறிகளோடு இடைப்பட ஆரம்பிக்கிறான். இது தவறான அணுகுமுறையாகும். ஏனென்றால், அவன் தன் பாவங்களை அடக்குவதற்குப் போராடுகிறான்; நேர்மையாக வாழ்வதற்கு முயற்சிசெய்கிறான். ஆனால், பரிதாபமாகத் தோற்றுப்போகிறான். அவனுடைய தோல்வி அவனை சிலுவைக்கு நேராக நடத்துகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து செய்துமுடித்த சிலுவையின் வேலையை அவன் சார்ந்துகொள்ள ஆரம்பிக்கிறான். சிலுவையின் வேலையே பாவத்தின் வேரறுக்க

பரிசுத்த ஆவியானவர் வீரியமுடன் கையாளுகிற உபாயமாகும். பழைய வாழ்க்கை சிலுவையிலறை யப்படுகிறது; புதிய வாழ்க்கை வெளியரங்கமாகிறது.

“நான் செய்தது மிகவும் மோசமானதுதான்; ஆனால், நான் அந்த அளவுக்கு மோசமானவன் அல்ல என்று நாம் நினைப்பதுண்டு. ஆனால், அடிப்படையிலே, நாம் மிகவும் மோசமானவர்கள் என்றும், பாவிகள் என்றும் நமக்குக் காண்பிப்பதற்குத் தேவன் மிகவும் பிரயாசப்படுகிறார். அடிப்படைப் பிரச் சினை என்னவென்றால் நாம் பாவிகள்; பாவியாகிய மனிதனோடுதான் இடைப்பட்டாக வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன, கழுவப் படுகின்றன. இவ்வாறு, இரத்தம் நம் பாவங்களோடு இடைப்படுகிறது. ஆனால், சிலுவைதான் பாவ மனிதர்களாகிய நம்மோடு இடைப்படுகிறது. இரத்தம் நாம் செய்த பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுத்தருகிறது; சிலுவை பாவ மனிதர்களாகிய நமக்கு விடுதலையைப் பெற்றுத்தருகிறது” Watchman Nee

“தேவனுடைய மக்கள் போதுமான அளவுக்கு அல்லது முழுமையாக சிலுவையைப் புரிந்துகொள்ள வில்லை; ஆகவேதான், அநேகக் கிறிஸ்தவர்கள் மாம்சப்பிரகாரமானவர்களாக இருக்கிறார்கள் அல் லது தங்கள் சொந்த முயற்சியால் தேவனுக்காக வாழ முயற்சிசெய்கிறார்கள். இது, மரத்தின் அடி வேரைப்போல், அவர்களுக்குள் இருக்கிற ஆவிக்குரிய வாழ்க்கையின் பலவீனத்தையும், ஏழ்மை யையும் காண்பிக்கிறது. ‘எழுப்புதல்’ வேண்டும் என்று அதிகமாக ஜெபிக்கிறார்கள்; ‘ஆவிக்குரிய வாழ்க்கை ஆழமாக’ வேண்டும் என்பதற்காக அதிகமாக முயற்சி செய்கிறார்கள். சிலுவையைப் பற்றிய ஒரு புதிய அறிவும், புரிந்துகொள்ளுதலும் இதற்குத் தீர்வாகும்; சிலுவை பாவங்களோடு இடைப்படுவதோடு நின்றுவிடவில்லை; பாவங்களின்மேல் வெற்றிபெற்ற வாழ்க்கை வாழ்வதற்கும், கிறிஸ்து இயற்கையான மனிதனை அகற்றிவிடுவதற்கும் சிலுவையே வழியாகும். சிலுவையைப்பற்றி இந்தப் புதிய அறிவு அவசியம்” T.Austin-Sparks.

“*எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது; அதை அறி யத்தக்கவன் யார்?*” (எரேமியா 17:9).

---

## 1-14 எங்கும் நிறைந்திருக்கும் சிலுவை

“*நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தேயல்லாமல் வேறொன் றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக*” (கலாத்தியர் 6:14).

எப்படி ஜெபிப்பது என்று நாம் ஒருபோதும் கற்றுக்கொள்ளவோ அல்லது நம்முடைய ஜெபத்தை நாம் மேம்படுத்தவோ முடியாது. ஒருவன் இதைப் பார்க்கும்போதுதான் அவன் பல ஆண்டுகளாக சந்திக்கிற விரக்தியிலிருந்து விடுதலைபெற முடியும்; ஜெபத்தை மேம்படுத்துவதற்காக அவன் எடுக் கும் முயற்சிகளைக் கைவிட முடியும். ஏனென்றால், ஜெபம் என்பது புதிய ஜீவனின் வழிந்தோடுத லாகும்; ஒருவன் கிறிஸ்துவில் வளரும்போது, சிலுவையானது பழையதிலிருந்து புதியதை விடுதலை யாக்குவதால், வீரியமுள்ள ஜெபம் உருவாகி, வளர்கிறது.

“சிலுவை இல்லையென்றால், ஜெபம் வெறுமனே ஒரு மதச்சடங்காக மாறிவிடும்; அதுபோல, ஜெபம் இல்லையென்றால், சிலுவையின் நோக்கம் நிறைவேறாமல் போய்விடும். சிலுவை நம்மில் கிரியை செய்யும்போது, அதாவது பழைய மனிதனின் எல்லா ஆதிக்கத்தையும், நம் சுபாவத்தில் தேவனுக்கு எதிராக இருக்கிற எல்லாவற்றையும், மரணத்தில் கிடத்தும்போது, சிங்காசனத்தில் தேவனோடு கலந் துறவாடுவதற்கும், நம் எதிரியோடு மோதுவதற்கும் நம் ஆவிக்குத் தெளிவான வழி பிறக்கிறது.

இந்த மோதுதலை எதிர்கொள்வதற்கு ஜெபம் நமக்கு வல்லமையைத் தருகிறது. இந்த மோதுதல் எவ்வளவு தீவிரமானது என்பதைப் பார்க்கும்போதுதான் ஜெபத்தின் மதிப்பும், தேவையும் நமக்குத் தெளிவாகத் தெரியும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கல்வாரிச் சிலுவையிலே நம் கிருபாதார பலியானார்; இதுதான் அவர் இப்போது நமக்காகப் பிதாவிடம் பரிந்துபேசிக்கொண்டிருப்பதற்கான தளமும், காரணமுமாகும். அதுபோல, அவர் கல்வாரியில் தம் சிலுவை மரணத்தின்மூலம் பெற்ற வெற்றியே ஜெபத்திற்கான தளமும், காரணமுமாகும். சிலுவை இல்லையென்றால், ஜெபம் வெறு மனே ஒரு சபைக்கட்டளையாக அல்லது பக்திமயமான வார்த்தைகளில் சொல்லப்படுகிற ஒரு மதப்

பயிற்சியாக மட்டுமே இருக்கும். ஜெபத்தைப்பற்றிய ஏதாவது ஒரு புத்தகத்தை நீங்கள் வாசிக்க நேரிட்டால், அந்தப் புத்தகத்தில் சிலுவைக்கு எவ்வளவு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பாருங்கள். அதை வைத்து அந்தப் புத்தகத்தின் மதிப்பையும், தரத்தையும் அளந்துவிடலாம்'' G.Watson

*"நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனேயாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்" (1 சாமுவேல் 12:23).*

---

### 1-15 "சகல மக்களையும் சீடராக்குங்கள்"

*"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்" (யோவான் 8:31).*

ஒருவன் ஆவியானவரால் மறுபடியும் பிறக்கவேண்டுமானால், ஆவியானவர் அவனுடைய இருதயத்தை ஆயத்தமாக்க வேண்டும். அதற்காக, தேவன் எவ்வளவு காலம் ஆனாலும் பொறுமையுடன் காத்திருக்கிறார். ஒருவன் மனந்திரும்பியபின் (சம்பந்தப்பட்ட எல்லாருக்கும்) வருகிற ஏமாற்றத்தையும், விரக்தியையும் தவிர்க்க வேண்டுமானால், அவனை ஆண்டவரிடம் கொண்டுவருவதற்கு முன் போதுமான அளவுக்கு ஆயத்தப்படுத்த வேண்டும். தம் சீடர்களாக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே ஆண்டவராகிய இயேசு தனிப்பட்ட நபர்களை இரட்சிக்கிறார் என்பதை நாம் ஒருமுறை பார்த்துவிட்டால், தேவனுக்காக சாட்சிபகர்வதற்கும், அதைத் தொடர்ந்து ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதற்கும் நாம் இன்னும் திட்டவட்டமாகவும், தீர்க்கமாகவும் செயல்படுவோம்.

"எல்லாத் தேசங்களைச் சார்ந்த மக்களையும் வெறுமனே "மதமாற்றம்" செய்ய வேண்டும் என்பதல்ல, மாறாக அவர்களைச் சீடர்களாக்க வேண்டும் என்பதே அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையாகும். ஆண்டவருடைய கட்டளையை நாம் ஒதுக்கித்தள்ளும்போது, தேவையற்ற பாடுகளையும், ஏமாற்றத்தையும் நாம் நமக்கு ஏராளமாகச் சேர்த்துக்கொள்ளுகிறோம். நாம் இதைச் செய்யத் தவறியதால், சீடர்களாக மாறியிருக்க வேண்டிய எத்தனையோ பேர், மதம்மாறிய கையோடு தவறான போதனைகளை ஆதாரமாகக் கொண்ட சமயக்குழுக்களுக்குள் அடித்துச்செல்லப்பட்டிருக்கிறார்கள்.

வெறுமனே "மதம்மாறியவர்களை" சரியான வழியில் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக நாம் பல நடவடிக்கைகள் எடுக்கிறோம், பல திட்டங்களைத் தீட்டுகிறோம். ஆனால், இப்படி வெறுமனே "மதம்மாறியவர்கள்" உண்மையாகவே "மறுபடியும் பிறப்பதற்கு" நாம் ஆரம்பத்திலேயே இன்னும் கொஞ்சம் அதிகமான நேரம் செலவழித்திருந்தால், அவர்கள் ஆவியானவர் போதிப்பதை ஏற்றுக்கொள்ளக்கூடிய திறனைப் பெற்றிருப்பார்கள் என்றும், பின்னாட்களில் பலருக்கு வரக்கூடிய தலைவலியைத் தவிர்த்திருப்பார்கள் என்றும், அவர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய வேலை தேவனுடைய வழியில் செயல்பட்டிருக்கும் என்றும் நான் நம்புகிறேன்" J.C.Medcalf

"மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பனுக்கு ஐயோ!" *(சகரியா 11:17).*

---

### 1-16 பரஸ்பரமான அபிப்பிராயம்

*"தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்... நீங்கள் அறியும்படிக்கு..."(எபேசியர் 1:18).*

தேவையில் இருக்கும் விசுவாசிகளுக்குப் பயனுள்ள வகையில் பகிர்ந்துகொள்ளவேண்டுமானால், பிதாவானவர் அவர்களுக்காகத் தீட்டியுள்ள திட்டம் என்னவென்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் நாம் வளரும்போது மட்டுமே இந்தப் புரிந்துகொள்ளுதல் வரும். வெறுமனே வசனத்தைத் தெரிந்தவர்களால் ஒருவேளை நன்றாகப் பிரசங்கம் பண்ண முடியலாம். ஆனால், அவர்களால் உண்மையான விதத்தில் பகிர்ந்துகொள்ள முடியாது. மற்றவர்களுடைய இருதயத்தின் தேவை என்னவென்பதைப் பொறுத்தவரை அவர்களுடைய புரிந்துகொள்ளுதல் மிகவும்

குறைவுள்ளது; அவர்கள் பேசுவதைக் கேட்பவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். மூளையில் இருக்கும் அறிவு (படிப்பு) இருதய-அறிவோடு (அனுபவம்) ஒருங்கிணைக்கப்பட வேண்டும்; அப்போது மட்டுமே பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு பகிர்ந்துகொள்ள முடியும்.

"நம்மிடம் உண்மையான நம்பிக்கை இருந்தால், அந்த நம்பிக்கை நம் ஊழியத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்; நம் பார்வையில் பெரிய வித்தியாசம் ஏற்படும். அப்போது, துக்கத்தின் மத்தியிலும் மகிழ்ச்சி ஏற்படும்; தோல்வியின் மத்தியிலும் தன்னம்பிக்கை இருக்கும்; நாம் யாருக்கு ஊழியம் செய்கிறோமோ, அவர்களைப்பற்றிய நம் மனப்பாங்கு மாறிவிடும்; அவர்களுடைய தற்போதைய நிலைமையை நாம் பார்க்க மாட்டோம்; மாறாக, தேவன் அவர்களை எப்படி மாற்றப்போகிறார் என்ற கோணத்தில் பார்ப்போம்; அப்போது நாம் அவர்களிடம் பொறுமையாக இருப்போம், அவர்களை மன்னிப்பது நமக்கு எளிதாகிவிடும். ஏனென்றால், தேவன் அவர்களில் ஏற்கெனவே செய்துமுடித்த வேலையை நாம் பார்க்கிறோம். அந்த நம்பிக்கை நாம் அவர்களுக்காக ஏறெடுக்கும் ஜெபத்தின் தன்மையை மாற்றுகிறது. அவர்களுடைய வாழ்க்கையில் கொஞ்சம் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்றோ அல்லது கொஞ்சம் ஆசீர்வாதம் வேண்டும் என்றோ நாம் ஜெபிக்க மாட்டோம். அதற்குப்பதிலாக, கர்த்தருடைய முழுமையான வெற்றி அவர்களுடைய வாழ்க்கையில் நிலைநாட்டப்பட வேண்டும் என்று நாம் ஜெபிப்போம். அந்த நம்பிக்கையே நாம் அவர்களுக்குப் போதிக்கும் விதத்தை மாற்றுகிறது. தேவனுடைய இன்னும் கொஞ்சம் சத்தியத்தைப் பயத்தோடு கொடுப்பதற்குப் பதிலாக, அவருடைய முழு ஆலோசனையையும் தைரியத்தோடு அவர்களுக்கு வழங்குவோம். தேவன் ஏற்கெனவே செய்து முடித்த வேலையினால் விளைந்த மகிழ்ச்சி எப்போதும் நம் கண்முன் இருக்கிறது. தேவன் அந்த வேலையை நிறைவேற்றப்போகிறார் என்று நமக்குத் தெரியும்" Andrew Murray

"*உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்துவாரென்று நம்பி...*" (பிலிப்பியர் 1:5)

---

## 1-17 இளைப்பாறுதலோடு செய்யும் செயல்

"அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்" (ஏசாயா 30:15)

சோம்பேறித்தனத்துக்கும் இளைப்பாறுதலுக்கும், செத்ததன்மைக்கும் அமரிக்கைக்கும் இடையே பெரிய வித்தியாசம் உண்டு; அதுபோல பதற்றத்துடன் பரபரப்பாக எதையாவது செய்வதற்கும், ஆவியானவரால் ஏவப்பட்டு எதையாவது செய்வதற்கும் இடையே மிகப் பெரிய வேறுபாடு உண்டு; நாம் தேவனுக்காக வேலை செய்வதற்கும், தேவன் தம் வேலையை நம்மூலம் செய்வதற்கும் இடையே மிகப் பெரிய வித்தியாசம் உண்டு; ஒன்று சுயம், மற்றொன்று கிறிஸ்து. சுயத்துக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள வித்தியாசத்துக்கு எல்லையேயில்லை.

"இரண்டு பங்காளிகள் கூட்டாகச்சேர்ந்து முதலீடு செய்து ஒரு வியாபாரம் செய்யலாம். ஆனால், இதுபோல, தேவனும் மனிதனும் சேர்ந்து கூட்டுவியாபாரம் செய்ய முடியாது. தேவனும் மனிதனும் சேர்ந்து செய்யும் செயலில் மனிதனின் பங்கு என்னவாக இருக்க வேண்டுமென்றால் அவன் தேவனுடன் ஒத்துழைக்க வேண்டும்; அவரின் கட்டளைகளுக்குப் பணிந்தடங்க வேண்டும்; இதுதான் திட்டம். ஆண்டவராகிய இயேசு தாம் பேச வேண்டிய எல்லா வார்த்தைகளுக்காகவும், தாம் செய்ய வேண்டிய எல்லா வேலைகளுக்காகவும் பிதாவைச் சார்ந்திருந்தார். அதுபோல, ஒரு விசுவாசியால் தானாகவே எதையும் செய்ய முடியாது. அவனால் தானாகவே எதையாவது செய்ய முடியுமென்றால் அது பாவமானதாக இருக்கும். ஆகையால், அவன் சுயமாகக் காரியங்களைச் செய்வதை முழுவதும் நிறுத்திவிட்டு, தேவன் தன்னில் வேலைசெய்வதற்காக அவன் காத்திருக்க வேண்டும். விசுவாசி தன் சுய-முயற்சியை நிறுத்தும்போது, தேவன் அவனில் வேலைசெய்து தாம் திட்டமிட்டதை என்ற நிச்சயத்தை விசுவாசம் அவனுக்குக் கொடுக்கிறது."

"அவனுடைய எல்லா ஆற்றல்களும், திறமைகளும் முழுமையாகப் பயன்படும் வகையில் தேவன் அவைகளைப் புதுப்பித்து, பரிசுத்தமாக்கி, விழித்தெழச் செய்துகொண்டிருக்கிறார். ஒருவன் எந்த அளவுக்குத் தன்னைப் பிதாவின் கரத்தின்கீழ் 'அடங்கியிருக்கிற கருவியாக' விட்டுக்கொடுக்கிறானோ, அந்த அளவுக்கு அவர் அவனைத் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு 'செயல்படுகிற கருவி

*யாகப்’ பயன்படுத்துவார். எந்த மனிதனில் ‘அமைதலான அடங்கியிருத்தல்’ ‘உயர்ந்த செயல்’ ஆகிய இரண்டு அற்புதமான குணங்களும் உருவாகியிருக்கிறதோ, அந்த மனிதனிடம் கிறிஸ்தவ வாழ்க்கை யின் ஆழமான அனுபவம் இருக்கிறது என்று பொருள்”* Andew Murray

“இவன் அவர்களைத் தன் இருதயத்தின் உண்மையின்படியே மேய்த்து, தன் கைகளின் திறமை யினால் அவர்களை நடத்தினான்” (சங்கீதம் 78:72).

---

## 1-18 வளர்ச்சியடைந்த கொடை

*“கர்த்தரோ உண்மையுள்ளவர்; அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று உங்களை விலக்கிக் காத்துக்கொள்வார்”* (2 தெசலோனிக்கேயர் 3:3)

விசுவாசம் நாம் தேவனிடமிருந்து பெறுகிற ஒரு கொடை. எனினும், தேவன் அதை நம்மில் வளரச் செய்ய வேண்டும். நம்மில் விசுவாசம் வளரவில்லையென்றால், நாம் வசனமாகிய பாலை மட்டுமே குடித்துக்கொண்டிருக்கிற கிறிஸ்துவுக்குள்-குழந்தைகள் என்ற கட்டத்தைத் தாண்டி நாம் ஒருபோதும் முன்னேறிச் செல்ல முடியாது. *“பலமான ஆகாரமானது நம்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்கிற ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர் களுக்கே தகும்; ஆகையால் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, பூரணராகும்படி நாம் கடந்துபோவாமாக”* (எபிரேயர் 5:14-6:1).

“விசுவாசத்தை நீங்கள் மிகவும் வசதியான, சௌகரியமான, சூழலில் ஒருபோதும் கற்றுக்கொள்ள மாட்டீர்கள். அமைதியான வேளையில் தேவன் முதலாவது நமக்கு வாக்குறுதிகள் அளிக்கிறார்; அவர் தம் உடன்படிக்கைகளை கிருபையான வார்த்தைகளால் முத்திரிக்கிறார்; அதன்பின் அவர் மறைந்திருந்து நாம் அவைகளை விசுவாசிக்கிறோமா இல்லையா என்று பார்க்கிறார். எப்படி? அவர் சோதனைக்காரனை அனுப்புகிறார். அப்போது நாம் சந்திக்கின்ற பரீட்சைகளும், நாம் கடந்துபோகிற பாதைகளும் தேவன் இதுவரை சொன்ன எல்லாவற்றுக்கும் முரணாக இருப்பதுபோல் தோன்றும். அப்போதுதான் விசுவாசம் வெற்றிவாகை சூடுகிறது. அதுதான் நாம் அவருடைய முகத்தை நோக்கிப் பார்த்து, “ஆண்டவரே, நீர் சொன்னபடி காரியங்கள் நடக்கும் என்று நான் நம்புகிறேன்,” என்று சொல்வதற்கான நேரம்.”

“விசுவாசம் சோதிக்கப்படவில்லையென்றால் நாமெல்லாரும் அழிந்துபோவோம். சோதனைகள்மூலம் இரண்டு காரியங்கள் நடக்கலாம்; ஒன்று அவைகள் தேவனுடைய வல்லமையான வாக்குறுதிகளை உறுதியாகப் பற்றிக்கொள்வதற்கு வாய்ப்புகளைத் தருகின்றன; அவைகளின்மூலம் அவரை அற்பு தமாக மகிமைப்படுத்துகிற ஆசீர்வாதங்களும் வருகின்றன. இல்லையென்றால், இந்தச் சோதனை களில் தேவனைத் தவறவிட்டுவிடுவோம்; அதனால் ஆசீர்வாதத்திற்குப்பதிலாக இருதயத்தில் களைப்பையும், வலியையும் ஏற்படுத்துகிற சுமை ஏற்படுகிறது.”G.Watson

*“இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே”* (யாக்கோபு 5:11).

---

## 1-19 “எப்படி” என்பதல்ல, மாறாக “என்ன” என்பதே காரியம்

*“...தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்”* (2 கொரிந்தியர் 9:8)

தேவன் கிறிஸ்துவில் நமக்காகச் செய்துமுடித்திருக்கிற காரியங்களில் நாம் இளைப்பாறத் தொடங்கி விட்டால், அவைகளை அவர் நம் அன்றாட வாழ்க்கையில் எப்போது, எப்படி நிறைவேற்றுவார் என் பதைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

“தேவனுடைய வாக்குறுதிகளை உறுதியாகப் பற்றிக்கொள்வதற்குப்பதிலாக, அவர் அவைகளை எப்படி நிறைவேற்றுவாரோ என்று சிந்தித்துக்கொண்டிருப்பதால், தேவனுடைய பிள்ளைகள் அநேகர்

மிகவும் பலவீனமாகவும், பயந்தவர்களாகவும் இருக்கிறார்கள். அவர் தம் வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றுவார் என்பதில் நமக்குச் சம்பந்தம் இல்லை. நம் பிதாவானவர் தம் வார்த்தையையும், வாக்குறுதிகளையும் நமக்குத் தந்திருக்கிறார் என்பது நமக்குப் போதும். ஆகையால், நாம் அனு பவிக்கிற பாடுகள் அல்லது சோதனைகள் எப்படிப்பட்டவைகளாக இருந்தாலும் சரி, தேவன் தம் முடைய வாக்குறுதிகள் எல்லாவற்றையும் நிறைவேற்றியே தீருவார் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

தேவன் தம் வார்த்தையை எப்படி நிறைவேற்றப்போகிறார் என்பதை நாம் கொஞ்சங்கூடப் புரிந்து கொள்ளாவிட்டாலும், அவர் தம் வார்த்தையை நிச்சயமாக நிறைவேற்றுவார் என்பதை நாம் ஒரு போதும் சந்தேகிக்கக்கூடாது. அப்போது பழைய ஏற்பாட்டு யோசுவாவோடு சேர்ந்து, "*உங்கள் தேவ னாகிய கர்த்தர் உங்களுக்காகச் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை என்பதை உங்கள் முழு இருதயத்தாலும் உங்கள் முழு ஆத்துமாவாலும் அறிந்திருக் கிறீர்கள். அவைகளெல்லாம் உங்களுக்கு நிறைவேறிற்று. அவைகளில் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை*" (யோசுவா 23:14) என்று நாமும் சாட்சி சொல்ல முடியும்." Evans Hopkins

"*...தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறது*" (2 கொரிந்தியர் 1:20)

---

## 1-20 திருப்தியான பங்கு

"*தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும், என் பங்குமாயிருக்கிறார்*" (சங். 73:26).

தேவனைத்தவிர மற்றவைகளெல்லாம் தோற்றுப்போகும்போது, நம் தேவைகளைத் திருப்திப்படுத் தாதபோது, நம் நிலைமைக்கு உதவாதபோது, நம் குறைவை நிறைவாக்காதபோது, தேவன் மட்டும் போதும் என்று நாம் கடைசியாகக் கண்டுகொள்கிறோம். நம் வாழ்க்கையில் நமக்கு மிகவும் அவசிய மான, மாறாத அன்பு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் நமக்குத் தாராளமாகவும், ஏராளமாகவும் இருக்கிறது. ஆனால், நாம் இதை அறியாமல், பெரும்பாலும் வேறு எங்கோ அதைத் தேடுகிறோம்.

"தெய்வீக அன்பில் இருக்கிற இளைப்பாறுதலை அறியும்போது கிடைக்கிற மனஅமைதியைவிட இன்பமான மனஅமைதி வேறெங்கும் இருக்க முடியாது. அதை அறியும்போது, இருதயம் அதில் எவ்வளவு விடுதலையோடு இளைப்பாறுகிறது! ஒருவன் அனுபவத்தில் இந்தக் கட்டத்தை எட்டு வதற்கு ஒருவேளை நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கும். இந்தப் பயணத்தில் அவன் அநேக நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டியிருக்கும்; அநேக பயிற்சிகளைச் செய்ய வேண்டி யிருக்கும்; அநேகக் காரியங்களை விடவேண்டியிருக்கும். இந்தப் பாதையில் அவன் சுயம், உலகம் என்றால் என்னவென்று கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். எல்லாவற்றிற்கும்மேலாக, தெய்வீக அன்பை நினைத்து அந்த நினைவுகளில் நாம் இளைப்பாறுவதே நாம் மேற்கொண்ட எல்லாப் பயிற்சிகளின் மாபெரும் முடிவும், இலக்குமாகும். அந்த அன்பு நம் இருயத்தின் உண்மையான பங்காக மாறிவிடுகிறது. நம் இருதயங்கள் தெய்வீக அன்பில் இளைப்பாறி, அதில் நிலைத்திரா விட்டால், உண்மையாகவே நம்மிடம் ஒன்றுமேயில்லை. ஏனென்றால், கிறிஸ்தவர்களாகிய நமக்கு இந்தப் பூமியில் வேறு எந்தப் பங்கும் இல்லை. தேவனுக்கு ஸ்தோத்திரம்! இது மிகவும் ஆசீர்வாத மான, திருப்பதியான பங்கு" Charles Andrew Coats

"தேவன் தம் அன்பைக் கொடுத்தபோது தமக்கென்று ஒரு பங்கை ஒதுக்கிவைத்துக்கொள்ளவில்லை. அவர் பூமியிலுள்ள மிக மோசமானவர்களுக்காகப் பரலோகத்திலுள்ள மிகச் சிறந்ததைக் கொடுத்திருக் கிறார். இதனால், அவர் நம் இருதயங்களில் "பிசாசின் கிரியைகளை" அழிக்கும்படிக்கு, அவநம்பிக்கையை அகற்றிவிட்டு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். தேவன் நமக்குத் தருவதை மட்டும் நாம் விரும்பி னால் நாம் பூரண மகிழ்ச்சியோடு இருப்போம். நாம் ஒன்றை நம் பிதாவின் கரத்திலிருந்து பெற்று, அதற்காக அவருக்கு நம்மால் நன்றி சொல்ல முடிய வேண்டும். அப்படிப் பெற்று, அதற்காக நன்றி சொல்ல முடியவில்லையென்றால், அதற்கு நம் வாழ்வில் எந்த மதிப்பும் இல்லை"

"*கர்த்தர் உங்கள் இருதயங்களை தேவனைப்பற்றும் அன்புக்கும்... நேராய் நடத்துவாராக*" (2 தெச. 3:5).

---

### 1-21 முன்னேற்பாடு

*"ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் நடந்து கொள்ளுங்கள்"* (கொலேசெயர் 2:6)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, "நான் ஓர் இடத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்," (யோவான் 14:2) என்று சொல்லும்போது அதை நாம் உடனே மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுகிறோம். ஆனால், இங்கே இப்போது நாம் நடப்பதற்காக அவர் நமக்காக ஒருவிதமான நடையை ஆயத்தம் பண்ணியிருக்கிறார் என்பதை விசுவாசிப்பதற்கு நம் இருதயம் ஆயத்தமாக இல்லை. *"ஏனெனில் தேவ னால் நமக்காக முன்குறிக்கப்பட்ட (ஏற்கெனவே திட்டமிடப்பட்ட) நற்கிரியைகளைச் செய்வதற்கு, நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு (புதிதாய்ப் பிறந்து) தேவனுடைய சொந்த செய்கையாயிருக் கிறோம் (கைவேலையாயிருக்கிறோம்); (முன்கூட்டியே அவர் நமக்காக ஆயத்தம்பண்ணின பாதைகளை எடுத்துக்கொண்டு) நாம் வாழ்வதற்காக அவர் முன்னேற்பாடு செய்து ஏற்கெனவே ஆயத்தம்பண்ணின நல்ல வாழ்க்கையை வாழ்ந்து அவைகளில் நாம் நடக்க வேண்டும்"* (எபேசியர் 2:10)

*"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்து வுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்* (எபே சியர் 1:3). தேவன் உங்களுக்கு இதுவரை தராத ஆசீர்வாதம் ஏதாவது இருக்கிறதா? தேவன் இன்று உங்களுக்கு ஒரு புதிய ஆசீர்வாதத்தைத் தந்தார் என்று உங்களால் சொல்ல முடியுமா? தேவன் உங்களுக்கு இதுவரை தராத ஒரு புதிய ஆசீர்வாதத்தை இன்றுதான் தந்தார் என்று நீங்கள் நினைத் தால், அவர் பவுலிடம் சொன்னது உண்மையில்லை என்று பொருள். ஏனென்றால், "தேவன்... ஆசீர்வதித்திருக்கிறார்; எல்லாம் முடிந்தது; எல்லாம் செய்துமுடிக்கப்பட்டாயிற்று" என்று அவர் கூறினார். உன்னதங்களிலே இருக்கும் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் அவர் நம்மை ஆசீர்வதித் திருக்கிறார். ஆனால், இது தெரியாமல், "தேவனே எங்களை ஆசீர்வதியும்; இதில் ஆசீர்வதியும்; அதில் ஆசீர்வதியும்" என்று நாம் கேட்டுக்கொண்டிருப்பது மிகவும் பரிதாபமான காரியம். எல்லாம் செய்து முடிக்கப்பட்டாயிற்று. அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே இருக்கும் சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஏற்கெனவே ஆசீர்வதித்திருக்கிறார். இதை நாம் விசுவாசித்துப் பெற்றுக்கொள்கிறோம்" L.L.Ledgers

*"...ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்திருக்கிறது"* (2 பேதுரு 1:3)

---

### 1-22 விடுதலை

*"இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத் தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதிலிருந்து விடுதலை யாக்கப்பட்டிருக்கிறோம்"* (ரோமர் 7:6)

இயற்கையான மனிதன் உற்பத்திசெய்யுமாறு நியாயப்பிரமாணம் அவனுக்குப் பிரயோகிக்கப்பட்டது; ஆவிக்குரிய மனிதன் உற்பத்திசெய்யுமாறு கிருபை அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

"ஏறக்குறைய எல்லா விசுவாசிகளும் கலாத்திய கிறிஸ்தவர்கள் செய்ய தவறைச் செய்கிறார்கள். விசுவாசத்தால் மட்டுமே நாம் நிற்கிறோம், நடக்கிறோம், வாழ்கிறோம் என்பதை ஒரு சிலர் மட்டுமே இரட்சிக்கப்பட்டவுடனே கற்றுக்கொள்கிறார்கள். நியாயப்பிரமாணத்துக்கு மரித்தோம் என்பதையோ, நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டோம் என்பதையோ, கிறிஸ்து நமக்குத் தந்திருக்கிற விடுதலையையோ அவர்கள் கொஞ்சங்கூடப் புரிந்துகொள்ளவில்லை (ரோமர் 7:6). நியாயப்பிரமாணம் நம்மை நடத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட தெய்வீகக் கட்டளை என்று அவர்கள் நினைக்கிறார்கள். எனவே, அவர்கள் இரட்சிக்கப்பட்டவுடன், நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுவது தங்கள் கடமை என்றும், அதைப் பின்பற்றுவதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாகவும், தகுதியானவர்கள் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். நியாயப்பிரமாணத்திற்கல்ல, ஜீவிக்கும் ஒரு நபருக்கே இப்போது நாம் கட்டப்பட்டிருக்கிறோம் என்றும், அவருடைய வல்லமையில் நாம் வைத்திருக்கும் உறுதியான விசுவாசத்தாலும், அவருடைய ஜீவன் நம்மில் எப்போதும் வேலைசெய்வதாலும் மட்டுமே நாம் கீழ்ப்படி

வதும், வளர்வதும் சாத்தியம் என்று அவர்களால் புரிந்துகொள்ள முடியாது (பிலிப்பியர் 2:13)" Andrew Murray

"தேவனுடைய நியாயப்பிரமாணம் நல்லது, பரிசுத்தமானது, பூரணமானது; ஆனால், நம்மை நீதிப்படுத்தவோ அல்லது பரிசுத்தமாக்கவோ அதற்கு எந்த வல்லமையும் இல்லை. நியாயப்பிரமாணத்தால் நம் பழைய சுபாவத்தை எந்த வகையிலும் சிறந்ததாக்க முடியாது. அது புதிய சுபாவத்தின் சட்டமும் அல்ல. பழைய மனிதன் அதற்குக் கீழ்ப்பட்டவன் அல்ல. புதிய மனிதனுக்கு அது தேவையில்லை. புதிய சிருஷ்டிப்பின் இலக்கு கிறிஸ்து; பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் மட்டுமே நாம் இந்த இலக்கை எட்ட முடியும்; இவர் மட்டுமே தேவனுக்குப் பிரியமானவர், ஏற்புடையவர்" William Kelly

"*அவர் மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல்...அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்*" (எபிரேயர் 7:16, 17).

---

## 1-23 முதலாவது, இயேசுவின் பாதம்

"*மரியாள்...இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகுந்த வருத்தமடைந்தாள்...*" (லூக்கா 10:39, 40).

கடமையைச் செய்யாமல் தட்டிக்கழிக்கிற மாணவன் மோசமான வேலைக்காரனாக மாறுவான்; ஊக்கத்தோடு உழைக்கிற மாணவனோ நல்ல வேலைக்காரனாக மாறுவான். "*நீ வெட்கப்படாத வேலைக்காரனாயும், உன்னை தேவனுக்குமுன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கரதையாயிரு*" (2 தீமோ. 2:15).

"தேவனுக்குப் பணிவிடை செய்யவேண்டும் என்று உடனே நாடாதே. அதற்கு மாறாக, அவருக்குப் பணிவிடை செய்வதற்கேற்ற பாத்திரமாக ஆயத்தமாக்கப்படுவதை நாடு. அவரை சேவிக்க விரும்புகிற எல்லாரும் கொஞ்சக் காலம் பயிற்சிப்பருவத்தில் செலவிட வேண்டும். நாம் எதற்குப் பொருத்தமானவர்கள் என்று நமக்குத் தெரியாது. எனவே, நாம் அவருடைய பாதத்தில் காத்திருக்க வேண்டும். அப்போது, அவர் நம்மை எதற்காக முன்குறித்தாரோ, அதற்காக அவர் நம்மை ஆயத்தமாக்குவர். தேவன் நம்மை அழைத்த அழைப்புக்கு அப்பாற்பட்ட காரியங்களைச் செய்வதற்கு நாம் முயன்றால், நாம் நமக்கும், தேவனுடைய வேலைக்கும் முட்டுக்கட்டையாக மாறிவிடுவோம்."

"இந்த நாட்களில் அநேகர் செய்வதுபோல, நீயும் உடனடியாகத் தேவனைச் சேவிக்க ஆரம்பித்துவிட்டால், அதன்பின் நீ ஒருபோதும் அவருடைய பாதத்தில் அமரமாட்டாய்; அதற்குப்பதிலாக, நீ அவரை நோக்கிப்பார்த்தால் வெகுவிரைவில் நேர்த்தியாகவும், ஞானமாகவும், தேவன் ஏற்கும்வகையிலும் நீ அவரைச் சேவிப்பாய். பரபரப்பான சேவையின்மத்தியில் மனச்சாட்சி அமைதியாகிவிடும்போதும், கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருப்பதை நாம் அசட்டைசெய்து, அதைப் புறக்கணிக்கும்போதும், அது எதிரியாகிய சாத்தானுக்குச் சாதகமாகிவிடுகிறது. ஏனென்றால், கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருக்கும்போதுதான் மனச்சாட்சி பிரகாசிக்கப்படுகிறது; அங்குதான் கர்த்தருடைய மனதையும், விருப்பத்தையும் தெளிவாகத் தெரிந்துகொள்கிறோம். ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்திருப்பது என்றால் என்னவென்பதை அறிந்த ஒருவன் தான் அவருக்குச் செய்யும் சேவையை அதைவிட முக்கியமாகக் கருதமாட்டான். அந்த அருமையை அறிந்தவன் தன் பணிவிடையை அருமையாகக் கருதியை நான் ஒருபோதும் கண்டதில்லை. ஆனால், தாங்கள் தேவனுக்குச் செய்யும் சேவையைவிட அவருடைய பாதத்தில் அமர்ந்திருப்பதை இன்பமாகக் கருதக்கூடிய ஏராளமான வேலைக்காரர்களை எனக்குத் தெரியும். அவரில் நிலைத்திருக்கிறவர்கள் மட்டுமே அவரைச் சேவிப்பதற்கு மிகத் திறமையானவர்கள்; அவருடைய நம்பிக்கைக்கு உரியவர்கள் மட்டுமே அவரை வீரியமாகச் சேவிக்க முடியும்" James Butler Stoney

"*இதோ! வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப்போலவும் கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ்செய்யும்வரைக்கும் எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது*" (சங்கீதம் 123:2)

---

## 1-24 நிறைவில் நிலைத்திரு

*“என்னில் நிலைத்திருங்கள்; நானும் உங்களில் நிலைத்திருப்பேன். கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்”* (யோவான் 15:4)

கிளையில் விளையக்கூடிய கனியின் தரம் எப்படி இருக்கும் என்பது திராட்சைச் செடியின் ஜீவனுடைய தரத்தைச் சார்ந்திருக்கிறது. தன்னில் விளையக்கூடிய கனியின் தரத்தை அல்லது அளவை கிளை தீர்மானிக்கவோ அல்லது உருவாக்கவோ முடியாது. திராட்சைச் செடி உருவாக்குவது கிளையில் வெளிவருகிறது; திராட்சைச்செடியால் உற்பத்திசெய்யப்படுவதை கிளை பெற்றுக்கொள்ளுகிறது.

“நாம் தேவனோடு நெருக்கமான, தூய்மையான ஐக்கியம்கொண்டு வாழ்வதே நம் மகிழ்ச்சியின் இரகசியம்; அதுவே நம் வளர்ச்சியின் இரகசியமுமாகும். அது மட்டும் அல்ல; தேவன் நம்முடைய சேவைகளை ஏற்றுக்கொள்வதற்கும், நாம் அவருக்குப் பயனுள்ள பாத்திரமாக இருப்பதற்கும், அதுவே தேவையான நிபந்தனையுமாகும். நாம் செய்கிற காரியத்தின் மதிப்பு நாம் என்னவாக இருக்கிறோம் என்பதையே சார்ந்திருக்கிறது. நாம் என்னவாக இருக்கிறோம் என்பது நாம் எதில் நிலைத்திருக்கிறோம் என்பதைச் சார்ந்திருக்கிறது. உன்னதமானவரோடு அந்தரங்கத்தில் நிலைத்திருப்பதைப் பழக்கமாகக் கொண்ட மனிதனின் வாழ்க்கை ஏற்படுத்துகிற தாக்கமே பயன்படுத்துவதற்குரிய பலமான வல்லமையாகும். இப்பேர்ப்பட்டவன் ஜீவன், தூய்மை, வளம் ஆகிய எல்லாவற்றிற்கும் ஊற்றாகிய கிறிஸ்துவில் வாசம்செய்கிறான்” Evans Hopkins

“இது ஏற்கெனவே உங்களுடைய நிலைமைதான்; இதை நீங்கள் அப்படியே எடுத்துக்கொண்டால் போதும். “நீங்கள் தரித்திரர்கள்” என்ற வஞ்சக எண்ணத்தை எதிரியாகிய சாத்தான் அநேக விசுவாசிகளின் மனதில் விதைத்துவிட்டான். எனவே, அந்த எண்ணத்தால் நிரப்பப்பட்ட விசுவாசிகள் கிறிஸ்துவில் தங்கள் உண்மையான நிலையை மறந்துவிட்டு, கிறிஸ்துவில் ஏற்கெனவே தங்களுக்குரிய ஆசீர்வாதங்களை மறந்துவிட்டு, அந்த ஆசீர்வாதங்களை வாங்குவதற்காக கடுமையாக உழைக்கிறார்கள், பல்லைக் கடித்துக்கொண்டு பிரயாசப்படுகிறார்கள். உங்களுக்குத் தேவையான எல்லாம் ஏற்கெனவே கிறிஸ்துவில் இருக்கின்றன என்பதைப் பார்ப்பதற்கு இதுவே ஏற்ற நேரம். நீங்கள் அவரில் இருக்கிறீர்கள். இதுதான் ஏற்கெனவே உங்களுடைய நிலைமை. இந்த நிலைமையை அப்படியே எடுத்துக்கொண்டால் போதும். நிலைத்திருங்கள். David Troyan

*“நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்”* (2 கொரிந்தியர் 9:8).